தினமணி

பசுந்தீவன சாகுபடிக்கு 100 சத மானியம்: தருமபுரி மாவட்டத்துக்கு ரூ.90 லட்சம் ஒதுக்கீடு

First Published : 09 Jun 2012 09:21:32 AM IST

தருமபுரி, ஜூன் 8: தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், பசுந்தீவன சாகுபடிக்கு தமிழக அரசு 100 சதம் மானியம் வழங்குகிறது.

தருமபுரி மாவட்ட விவசாயிகள் இதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் எஸ். ராஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பாக, அவர் கூறியது:

விலையில்லா கறவைப் பசுக்களை வழங்கி ஏழை, எளிய விவசாயிகளுக்கு வருவாயைப் பெருக்க அரசு உதவி வருகிறது. கால்நடையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் பசுந்தீவனம் வழங்குவது அவசியம். கடந்த ஆண்டு 8 ஆயிரம் ஏக்கர் பரப்பில் அதிக மகசூல் தரக்கூடிய, புரதச்சத்து மிகுந்த தீவனப் பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்பட்டது.

மேலும், தீவன உபயோக மேலாண்மைக்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்து மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது.

இதில், தருமபுரி மாவட்டத்தில் 300 ஏக்கர் பரப்பில் தீவன சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கு கிறது. கால்நடைகளுக்குப் பசுந்தீவனம் குறைவின்றிக் கிடைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 600 ஏக்கர் பரப்பில் அதிக மகசூல் தரக்கூடிய புல் வகையைச் சேர்ந்த கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகங்கள் கோ-3, கோ-4 சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வீதம் 100 சதம் மானியம் வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 3 ஆயிரம் விவசாயிகளுக்கு இத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்க ரூ.90 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்கள், கால்நடை உதவி மருத்துவர்களை அணுகித் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பம் அளிக்கலாம் என்றார் அவர்.

விவசாயக் கண்காட்சியை பார்வையிட விவசாயிகளுக்கு ஏற்பாடு

First Published : 08 Jun 2012 10:59:33 AM IST

ராசிபுரம், ஜுன் 7: அரசின் அட்மா திட்டத்தின் கீழ் நாமகிரிப்பேட்டை பகுதி விவசாயிகள் கோவையில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

அரசு செயல்படுத்தி வரும் அட்மா திட்டத்தின் கீழ் நாமகிரிப்பேட்டை வட்டாரத்திற்கு உள்பட்ட ஆர். புதுப்பட்டி, மத்துரூட்டு, ஜேடர்பாளையம், பெரப்பன்சோலை, பெரியகோம்பை, மூலக்குறிச்சி, கரியாம்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த 95 விவசாயிகள் வேளாண்மைத் துறை சார்பில் கோவை கொடீசியா வளாகத்திற்கு ( அக்ரி இண்டெக்ஸ்க்கு ) அழைத்து செல்லப்பட்டனர். அங்கு நடைபெற்ற வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், கால்நடை ஆகிய துறைகளுக்கான கண்காட்சியினை பார்வையிட்ட விவசாயிகளுக்கு பல்வேறு நவீன கருவிகளின் தொழில்நுட்பம் குறித்து செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன.

மேலும் இயந்திரங்கள், வேளாண் கருவிகளின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமாக விவசாயிகள் கேட்டறிந்தனர். விவசாயிகளுடன் அட்மா தொழில் நுட்ப மேலாளர், வல்லுநர்கள், அட்மா குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் சென்றிருந்தனர்.

முட்டை விலை

First Published : 09 Jun 2012 09:25:59 AM IST

நாமக்கல், ஜுன் 8: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.95, சென்னையில் ரூ. 3.04.

---

தினகரன்

நாற்று விற்பனை

பதிவு செய்த நேரம்:2012-06-09 10:10:13

கோவை: கோவையை அடுத்த ஆனைகட்டியில் தமிழக அரசின் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான அரசு தோட்டக்கலை பண்ணைஉள்ளது. இங்கு, பழம் மற்றும் அழகு செடிகள்

குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. நெல்லி ஒட்டு செடி - ரூ.25, சப்போட்டா ஒட்டு செடி - ரூ.30, மா ஒட்டு செடி - ரூ.40, குண்டுமல்லி நாற்று - ரூ.5, பாக்கு நாற்று - ரூ.10, சில்வார், தேக்கு மர நாற்று - ரூ.5, சவுக்கு நாற்று - ரூ.2, அழகு செடிகள் - ரூ.5 ஆகிய விலைகளில் விற்கப்படுகின்றன. பொதுமக்கள் இவற்றை வாங்கி பயனடையலாம் என தோட்டக்கலை துறை துணை இயக்குனர் வின்சென்ட் மனோகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-06-09 10:04:19

தர்மபுரி: தர்மபுரியில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தீவனப்பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது.  இது குறித்து மாவட்ட ஆட்சியர் லில்லி வெளியிட்டுள்ள அறிக்கை: அரசு விலையில்லா கறவை மாடுகளை ஏழை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. மாவட்டத்தில் 600 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய புல் வகையை சேர்ந்த கம்பு, நேப்பியர், ஒட்டுப்புல் ஆகிய ரகங்கள் கோ 3, அல்லது கோ 4 சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு 3,000 ரூபாய் வீதம் 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக மாவட்டத்தில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பம் அளிக்கலாம்.

## விவசாயிகள் எதிர்பார்ப்பு கிராமப்புறங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அரசே ஏற்று நடத்துமா?

பதிவு செய்த நேரம்:2012-06-09 11:08:03

போளூர்:கிராமப்புறங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அரசே ஏற்று நடத்த வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

போளூர் சட்டப்பேரவை தொகுதியில் அரசு சார்பில் கேளூர், வடமாதிமங்கலம், படவேடு, பெரணமல்லூர், சேத்துப்பட்டு, பெரிய கொழப்பலூர் உள்ளிட்ட சில கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சமீபத்தில் தொடங்கப்பட்டது.

இங்கு விவசாயிகள் விற்பனை செய்யும் விளை பொருட்களில், வாடகை மற்றும் எடை ஆட்களுக்கு கூலி, மின்சார கட்டணம் உள்ளிட்டவைகளுக்கு பணம் பிடித்தம் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் தங்கள் விலை பொருட்களை இந்த கொள்முதல் நிலையங் களுக்கு கொண்டு வர தயக்கம் காட்டினர். இதுபோன்ற அவல நிலைகளால் சில கிராமங்களில்

தொடங்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையம் தற்போது இருந்த இடம் தெரியாமல் போனது. ஆனால் தற்போது செயல்பட்டு வரும் கேளூர் கிராமத்தில் உள்ள கொள்முதல் நிலையம், சொந்த கட்டிடம் இல்லாமல் சமுதாயக் கூடத்தில் உரிய பராமரிப்பு இல்லாமல் உள்ளது. இதனால் விவசாயிகள் தங்களின் விலை பொருட்களை ஏற்றி நகர்புறங்களில் இருக்கும் மார்க்கெட் கமிட்டிகளுக்கு இரவு பகல் பாராமல் எடுத்து செல்கின்றனர். அங்கு தங்கள் விளைபொருட்களை வந்த விலைக்கு விற்று விட்டு செல்கின்றனர்.

மேலும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மிக குறைந்த விலைக்கு விளை பொருட்களை விற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.  இது தவிர இடைத்தரகர் கள் உரிய நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யாமல் விவசாயிகளை மாதக்கணக்கில் அலைய விடுகின்றனர். விவசாயிகளின் இத்தகைய வேதனைகளை போக்க பல கிராமங்களில் பராமரிப்பு இன்றி உள்ள அரசு கட்டிடங்களை சீர் செய்து அரசே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நடத்த வேண்டும், விவசாயிகளுக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறுகிய காலங்கள் மட்டுமல்லாமல் நீண்ட காலத்திற்கு பயன்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெரியாறு அணை நீர் மட்டம் உயரத் தொடங்கியது நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை நீடிப்பு

பதிவு செய்த நேரம்:2012-06-08 12:53:05

மதுரை:முல்லைப்பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் மழை நீடிப்பதால், நீர் மட்டம் உயரத் தொடங்கி உள்ளது.

தென் மேற்கு பருவ மழை, கேரளாவில் ஆரம்பித்து கடந்த 2 நாட்களாக பெய்து வருகிறது. முல்லை பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதிகளில் மழை தீவிரமடைந்துள்ளது. பலத்த காற்றுடன் நேற்று முன்தினம் 8 மி.மீட்டருடன் ஆரம்பித்த மழை, நேற்று 39 மி.மீட்டராக அதிகரித்து பெய்தது.

தேக்கடியில் 5 மி.மீ. மழை, கூடலூர், உத்தமபாளையத்தில் தலா 1 மி.மீ. மழை பதிவானது. பெரியாறு அணைக்கு நேற்று முதல் தண்ணீர் வரத் தொடங்கி உள்ளது. வினாடிக்கு 305 கன அடி வந்தது. 110.90 அடியாக குறைந்திருந்த நீர் மட்டம் நேற்று முதல் உயரத் தொடங்கி, 111 அடியை தாண்டியது. 120 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

வைகை அணையில் 46.10 அடி தண்ணீர் உள்ளது. பருவ மழை நீடித்தால் இம்மாத இறுதிக்குள் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களில் 65 ஆயிரம் ஏக்கர் பெரியாறு பாசன முதல் போகத்திற்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

பெரியாறு பாசனக் கால்வாய் மற்றும் மடைகள் பராமரிப்பின்றி ஆங்காங்கே பழுதுபட்டு கிடக்கிறது. �இதை இப்போதே பொதுப்பணித்துறையினர் சீரமைத்து தயார் நிலையில் வைக்க வேண்டும்� என விவசாயிகள் தெரிவித்தனர்.

---



குன்னூர் பகுதியில்

# மழை இல்லாததால் கருகும் பீன்ஸ் பயிர்கள்

குன்னூர், ஜூன்.9-

குன்னூர் பகுதியில் மழை இல்லாததால் பீன்ஸ் பயிர்கள் கருகுகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**சீதோஷ்ண நிலையில் மாற்றம்**

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் உருளைக் கிழங்கு, பீன்ஸ், முட்டைகோஸ், பீட்ரூட், கேரட் போன்ற ஆங்கில காய்கறிகளை விளை வித்து வந்தனர். இது போன்ற காய்கறி பயிர்களுக்கு நீர் பாசனம் இன்றியமையாததாக இருந்தது. அந்த கால கட்டத் தில் பருவத்திற்கு தகுந்த மழை பெய்ததால் அந்தந்த பருவ காய்கறி பயிர்களை விளைவித்து வந்தனர். காலம் செல்ல செல்ல நீலகிரி சீதோஷ்ண நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

இதனால் காய்கறி விவசாயத் தில் ஈடுபட்டு வந்த விவசாயி கள் மழையின்றி நஷ்டத்தை சந்தித்து உள்ளனர். இதனை யடுத்து மாற்று பயிராக தேயிலை சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டது.

**காய்கறி விவசாயம்**

பணப்பயிராக அறிமுகம் செய்யப்பட்ட தேயிலை விவசாயம் அந்த கால கட்டத்தில் பெரும்பாலான சிறு விவசாயிகளால் மேற் கொள்ளப்பட்டது. பின்னர் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் விவசாயிகள் மீண்டும் ஒரு சில பகுதிகளில் காய்கறி விவசாயம், மலர் சாகுபடி போன்றவற்றில் ஈடு பட்டனர்.

ஆனாலும் குன்னூர் பகுதியை பொறுத்த வரை காய்கறி விவசாயம் கேத்தி, பாலாடா, சாந்தூர் போன்ற பகுதிகளில் அதிகளவு நடை பெற்று வருகிறது. உபதலை, ஜெகதளா, காரக்கொரை, ஒதனட்டி, எடப்பள்ளி உள்பட பல கிராம பகுதிகளில் காய்கறி பயிர்கள் விளைவிக்கப்படு கிறது.

தற்போது பெரும்பாலான இடங்களில் பீன்ஸ் பயிரிடப் பட்டு உள்ளது. பீன்ஸ் பயிரில் உள்ள இரு வகையான குத்து பீன்ஸ், கொடி பீன்ஸ் போன்றவை சாகுபடி செய்யப் பட்டு உள்ளன. இந்த பீன்ஸ் பயிர் கடந்த ஏப்ரல் மாதம் நடவு செய்யப்பட்ட தாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**விவசாயிகள் கவலை**

**மழை குறைவு**

இந்த ஆண்டு குன்னூர் பகுதியில் மழை குறைவாக உள்ளது. இதனால் காய்கறி பயிர்கள் மற்றும் தேயிலை செடிகளில் மகசூல் பாதிக்கப் பட்டு உள்ளது. ஊட்டியில் தொடர் மழை பெய்தாலும் குன்னூர் பகுதியில் மழை இல்லாமல் உஷ்ணம் நிலவி வருகிறது.

குன்னூர் சுற்றுப்புற பகுதி களில் நடவு செய்யப்பட்டு உள்ள குத்து பீன்ஸ் மற்றும் கொடி பீன்ஸ் பயிர்கள் வாடி கருகி வருகின்றன. மழை இல்லாததால் பீன்ஸ் பயிரில் மகசூல் பெருமளவு பாதிக்கப் பட்டு உள்ளது.

எதிர்வரும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் அறு வடை செய்ய தேவையான மகசூல் இல்லாமல் இருப்பதாக விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர். பயிர் களின் மகசூல் அதிகரிக்க விவசாயி கள் மழையை எதிர் பார்த்து உள்ளனர்.

குன்னூர் பகுதியில் போதிய மழை இல்லாததால் கருக தொடங்கி உள்ள பீன்ஸ் செடிகளை படத்தில் காணலாம்.

## *உலகில், மே மாதத்தில் உணவு தானியங்கள் விலை 4% சரிந்தது*

*உலக அளவில், மே மாதத்தில் உணவு தானியங்கள் விலை, ஏப்ரல் மாத நிலவரத்தைக் காட்டிலும் 4 சதவீதம் சரிவடைந்தது. 2011 செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு இந்த அளவிற்கு விலை வீழ்ச்சி கண்டது இதுவே முதல் முறையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.*

அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு அதிகரித்து வருகிறது. சர்வதேச பொருளாதார நிலை மந்தமாகவே உள்ளது. இந்நிலையில் உணவு தானியங்கள் சப்ளை அதிகரிப்பால் தேவைப்பாடு குறைந்து விலை கணிசமாக குறைந்துள்ளது.